# திரை ஓசை

உவமைக்கவிஞர் சுரதா

மணிவாசகர் பதிப்பகம்

# திரை இசை

உவமைக் கவிஞர் சுரதா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

நூல் : திரை ஓசை

புதிய பதிப்பு : சூன், 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041

**விலை : ரூ. 40.00**

மொத்தப் பக்கங்கள் : 80

அளவு : (டெம்மி) 1x8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1708

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
எம்.ஏ. பாலாஜி
அம்மா கணினியகம், சென்னை–17.



நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.
'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
'செந்தமிழ்க் காவலர்' என்றும்
விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12–B, மேலச் சன்னதி,
சிதம்பரம் – 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை – 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை – 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் – 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி – 620002.
தொலைபேசி: 2706450

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை–600 021.
தொலைபேசி: 25954528

# எதற்காக எழுதினேன்

நடிகைகளைப் பற்றி நான் எழுதி வருவது இன்று நேற்றல்ல. இருபத்தைந்து ஆண்டுகளாகவே எழுதி வந்திருக்கிறேன்.

ஆனந்த விகடனில் இவர்களைப்பற்றி நான் 1971 ஆம் ஆண்டில் தொடர்ந்து எழுதி வந்தபோது, நாட்டில் அதற்குப் பாராட்டும் பரபரப்பும் இருந்து வந்தன.

நடிகைகளைப் பற்றி எழுதலாமா? என்ற ஒரு கேள்வியைச் சிலர் எழுப்பக்கூடும். ஏன் எழுதக்கூடாது?

கவிஞர்கள் முத்தமிழில் முதல் தமிழை வளர்ப்பது போல, நடிகைகள் மூன்றாம் தமிழாகிய நாடகத்தமிழை நாள்தோறும் வளர்க்கிறார்கள்.

அவர்களின் சிறந்த நடிப்பிற்குப் பாரும் பாராளுமன்றமும் பல பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பிக்கின்றன. அப்படியிருக்க அவர்களைப் பற்றி ஏன் எழுதக்கூடாது?

நாயன்மார்களைப் பற்றி எழுதுவதுதான் கவிதை என்பதல்ல, நடிகைகளைப் பற்றி எழுதுவதும் கவிதைதான்.

நாட்டில் விளம்பரம் பெற்ற நடிகைகளைப்பற்றி நான் எழுதுவதற்குக் காரணம், இவர்கள் மூலம் கவிதைகள் விளக்கம் பெற்றுவிடும் என்பதற்காக அல்ல, விளம்பரம் பெறவேண்டும் பெறும என்பதற்காக!

இந்த நூதனக் கவிதைகளை நூலாக வெளியிட வேண்டு மென்று நான் நினைத்தேன். நிறைவேற்றி விட்டேன்.

சுரதா

*(முதல் பதிப்பின் முன்னுரை – 1974)*

# அத்திப்பழம் தின்பேன்

பாடல் பெற்ற பழங்களுள் ஒருபழம்
மாம்பழம். அவளது கன்னமோ மாம்பழம்.
பச்சைக் கிளிக்குப் பயன்படும் ஒருபழம்
கோவை. அவளிதழ் கோவைப் பழங்கள்.
அவளது குதிகால் அத்திப் பழங்கள்.

வேலை நிறுத்தம் செய்யாத வெண்ணிலா
மாலைப் பொழுது மறைந்தபின் வந்தது.
தோழியும் அவளும் சோலைக்குச் சென்றனர்.
தோழிதான் முதலில் பேசத் தொடங்கினாள்.
அதற்குப் பின்னர் அவளும் பேசினாள்.

வேனிலும் வந்தது, வேம்பும் மலர்ந்தது,
தேனினும் இனியவர் சென்றநாள் முதலாய்
ஊணு மில்லை உறக்கமு மில்லை!
அவர்வர வில்லை ஆதலின், வேம்பின்
தொகைமலர் பறித்துச் சூடா திருக்கிறேன்.

இவ்வூர் மக்களோ என்னைப் பற்றி
அலர்தூற்று கின்றனர். அதுகேட் டென்னுளம்

ஓரத்திப் பழத்தை ஓரேழு நண்டுகள்
அழுத்தி மிதித்தால் அப்பழம் எப்படிக்
குழையுமோ அப்படி குழைந்துபோய் விட்டதே
என்செய்வேன் தோழி– என்கிறாள் தலைவி.

முத்தம் கொடுக்கும் அத்தான் வராததால்,
அத்திப் பழம்போல் குதிகால் அமைந்தவள்
அப்பழம் குழைதல்போல் ஆகிவிட் டாளாம்!

பாதத் திற்கும் பரிதாபத் திற்கும்,
உவமை கூறிட உதவும் ஒரேபழம்,
அத்திப் பழந்தான். அந்தப் பழமோ

புண்ணில் லாமலே புழுக்க வல்லது!
சூடு தணியவும், இரத்தம் சுரக்கவும்,
தித்திக்கும் அத்தியைத் தின்றால் நல்லது.

அத்திப் பாலினால் பித்தம் பறக்குமாம்.
அத்தி மரத்தின் அடிவேரில் இறங்கிய
கள்ளில் சர்க்கரை கலந்துநாம் உண்டால்,
வெப்பமும் மேக வெட்டையும் நீங்குமாம்.

உத்தரவுக் கடங்கா உதிரப் பெருக்கும்,
அதிசீத பேதியும் ஆசனக் கடுப்பும்,
அத்திப் பட்டையின் மூலம் அகலுமாம்.

ராத்திரிக் குதவும் பூத்திரி நடிகையாம்
ராஜஸ்ரீ என்னும் ரஞ்சித மணிக்குப்
பழுத்த வாழைப் பழங்களைக் காட்டினும்,
அத்திப் பழங்களே அதிகம் பிடிக்குமாம்.

அத்திப் பழத்தினால் அநேக நோய்கள்
தீர்ந்து விடுமெனத் தெரிவதால் அப்பழம்
வேறு சிலரின் வேதனை தீரவும்,
பளபளப் பான பட்டு ரவிக்கை
மேடு சரிந்த நடிகையின் மெல்லுடற்
சூடு தணியவும் மிகமிகத் தேவையே!

# நான்
# நாவல் படிக்கிறேன்

காதலன் என்பவன் காதற் கைதி.
கணவன் என்பவன் ஆயுட் கைதி.
கவிஞன் என்பவன் கற்பனைக் கைதி.
புலவன் என்பவன் புத்தகக் கைதி.

கல்வியிற் சிறந்த கம்பனும், கம்பனை
ஓயா தெதிர்த்த ஒட்டக் கூத்தனும்,
புகழேந்திப் புலவரும் புத்தகக் கைதிகள்.

சேனா வரையரும் சேக்கி ழாரும்,
அந்த வரிசையில் அமிர்தகவி ராயரும்,
மறைமலை அடிகளும் பண்டித மணியும்
சவரி ராயரும் சாமிநா தையரும்,

இலக்குவ னாரும், இளங்கோவன் அவர்களும்,
சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரும்
அரசியல் மேதையாம் அண்ணா அவர்களும்,
பாடை ஏறும் வரையிலே, பயன்தரும்
ஏடும் கையுமாய் இருந்தோ ராவர்.

இலக்கண விளக்கம் எனும்நூல் எழுதிய
நாவலர் போன்றும் நாட்டார் போன்றும்,
சங்க நூற்களைச் சரியாய்க் கற்கவோ,
தாடைவலி யெடுக்கப் பாடஞ் சொல்லவோ,
இத்தமிழ் நாட்டில் இன்று யாருளார்?

அந்தக் காலமோ செந்தமிழ் இலக்கிய
கல்வியின் ஆழம் பார்த்திட்ட காலம்
இந்தக் காலமோ இறுகத் தழுவிக்
கலவியின் ஆழம் பார்க்கின்ற காலம்.

நாவல் வேண்டுமா? நற்றிணை வேண்டுமா?
இரண்டில் உனக்கிங் கெதுவேண்டும் சொல்லெனில்
நற்றிணை எதற்கு? நளவெண்பா எதற்கு?

நன்னூல் எதற்கு? நானாற்ப தெதற்கு?
நண்பரே எனக்கு நாவல்தான் வேண்டும்
என்பவர் தொகையே இன்றைக் கதிகம்.

முத்தமிழ் நாட்டில் முதன்முத லாகத்
தூய வேத நாயகம் பிள்ளையே
நவீனம் எனப்படும் நாவல் எழுதினார்.

அவருக்குப் பின்னரோர் ஐயர் எழுதினார்.
மரண மடையும் வரையிலே பிறரிடம்
சரண மடையாத சரவணப் பிள்ளையும்,

வேதிய ராகிய மாதவை யாவும்,
படிப்பிற் சிறந்த பரிதிமாற் கலைஞரும்
இலக்கியச் சுவையொடு நாவல்கள் எழுதினர்.

இப்படி இவர்கள் எழுதி வருகையில்
ஆரணி யாரும் வடுவூ ராரும்
எழுதத் தொடங்கினர். இந்நாட்டில் அவர்களால்
துப்பறியும் கதைகள் தோன்ற லாயின.

மாற்றாரை மதிக்கும் மனப்பான்மை கொண்ட
கல்கி அவர்களே கவனத்தை ஈர்க்கும்

வரலாற்று நாவல்கள் வரைந்து காட்டினார்.
இன்றுநம் நாட்டில் இலக்கிய நயத்தொடு
வரலாற்று நாவல்கள் வளர்வதைப் பார்க்கிறோம்.

சிறுமீன் கதைகளும் திமிங்கில நாவலும்,
மு.வ. எழுதலாம்; மு.க. எழுதலாம்,
மணியன் எழுதலாம். ஆர்.வி. எழுதலாம்
சாண்டில்யன் பார்த்த சாரதி எழுதலாம்.

தீக்குச்சி மருந்துபோல் தேகம் கறுத்துள
நடிகை வாணிஸ்ரீ நாள்தொறும் வீட்டில்
குடிப்பது பாலாம்! படிப்பது நாவலாம்!

பழைய புராணம் படிப்பதைக் காட்டிலும்
நாவல் படிப்பது நல்லதே எனினும்,
திருக்குறள் படித்தால் திருந்தி வாழலாம்!
இருட்டறை நாவல்கள் எத்தனை படிப்பினும்
வழுக்கி விழுந்தோர் மாற முடியுமா?

சாக்கடை நூல்களைச் சாத்திரம் என்போர்
பூக்கடை நூல்களைப் புரட்டுவ தில்லையே.

# நன்றி கூறும் நடிகை சாவித்திரி

இணையற்ற நடிகர் எனும்கா ரணத்தால்;
சிம்மக் குரலோன் சிவாஜி தன்னையும்;
சிரிப்பு மூட்டுவதில் சிறந்தவர் என்பதால்,
ஷீலாவின் கணவர், சந்திர பாபுவையும்;
இந்த ஆண்டு தேர்ந்து எடுத்தனர்.

திரைப்பட உலகில் சிறந்த நடிகை
ஆந்திர நாட்டு அணங்கு சாவித்திரி
என்று தேர்ந்து எடுத்தது சங்கம்!

வெற்றி பெற்றோர்க்கு, வாகினி நிலையத்தில்
பாராட் டும்,பரி சளிப்பும் நடந்தது
கூட்டத் திற்குக் குல்லாய் கவர்னர்,
தலைமை தாங்கினார், புகழ்ந்து பேசினார்.
காம ராசர் கருத்துரை வழங்கினார்.

வெடித்த மலரில், தேன்
குடித்த வண்டுகள்,
மயங்கி உறங்கும்
மாலைப் பொழுதினில்
கல்வியில் சிறந்த
கவர்னர் மேதி,

வழங்கிய பரிசை
வாங்கிக் கொண்டு—
தெலுங்கு மங்கை,
செந்தமிழ் மருமகள்,
கைப்பட்ட ரோஜா
ஜெமினி கணேசனின்,
சித்திர மனைவிசா வித்திரி பேசிய,
உரைநடைப் பேச்சை, நன்றி உரையை,

மாச்சீர், விளச்சீர் வைத்து எழுதும்
ஆசிரியப் பாவின் அமைப்பில் தந்துளோம்.
நீங்கள் சுவைத்திட, நெஞ்சில் பதித்திட!
அந்தப் பேச்சு அடியில் வருமாறு:

தகுதி மிக்க தலைவர் அவர்களே!
அளந்து பேசும் அமைச்சர் அவர்களே!
மதிப்புக்கு உரிய நடிக மணிகளே!
அனைவர்க் கும்,என் அன்பு வணக்கம்!

அறிஞரும், கலைஞரும், அரசியல் தலைவரும்,
கூடி இருக்கும்இக் கூட்டத்தி லேநான்
தமிழில்பேசு வதா? தெலுங்கில்பே சுவதா?

அல்லது இந்த நல்ல கூட்டத்தில்,
எனது உரையை இரண்டாக வகுத்துப்
பாதி தமிழிலும், பாதி தெலுங்கிலும்,
பேச லாமா? பேசு வோமா?
என்று யோசித்துக் கொண்டு இருந்தேன்.

தமிழில் பேசுவதே சரிஎன்று பட்டதால்
அடுக்குமொழி பேசும் நாட்டிலே—நாக்கில்
தடுக்கித் தடுக்கி வெளிவரும் வார்த்தையை
நன்றி உரையாக வைக்க நினைக்கிறேன்.

ஈன்று எடுத்து என்னை வளர்த்த
தொட்டில் நாடு, தெலுங்கு நாடு—என்
கட்டில் நாடு, கனித்தமிழ் நாடு!

வாழ்விலே எனக்கு வளர்ச்சி கொடுத்ததும்,
இரவையும், என்னையும் இனிக்க வைப்பதும்.
சந்தனம் பூசும்இச் செந்தமிழ் நாடுதான்!

பிறந்தேன் ஆந்திரப் பிரதே சத்திலே!
பெருமை பெறுகிறேன் தமிழ்மண்ட லத்திலே!
ஆந்திர நாட்டில்நான்
மங்கை ஆனேன்!
அருந்தமிழ் நாட்டில்நான்
மனைவி ஆனேன்!

மணல்வீடு கட்டி
மகிழ்ந்தேன் அங்கே!
மணவாள னோடு
மகிழ்கிறேன் இங்கே!

சின்னஞ் சிறிய பருவச் சிறுவர்
பள்ளிக் கூடத்துப்
பரீட்சையில் தேரினும்,

அல்லது அவர்கள் நல்ல காரியம்,
ஏதேனும் செய்யினும், இனிப்பு கலந்த
மிட்டாய் கொடுத்து மகிழ்ச்சி ஊட்டுவர்.
அதுபோல், எனக்கும், எங்கட்கும், நீங்கள்,
பரிசு வழங்கிபா ராட்டுகின் றீர்கள்.

எங்களைப் பாராட்டும் இந்த விழாவில்,
ஆளும் முதன்மை அமைச்சரும், கவர்னரும்,
கலந்து கொண்டதைக் கண்டு
அளவிலாப் பெருமை அடைகிறோம் யாமே!

இதழ்: இலக்கியம் (15-7-1958)

## தங்கரத்தினம்

இராதா மணாளன் எழுதும் கதைஇது.
இந்தக் கதைக்கு இவரே வசனமும்
எழுது கின்றார். இவரது எழுத்தோ
ஓடு நீங்கிய விளாங்கனி என்பதை
நாடும் ஏடும் நன்கு அறியும்.
இலட்சிய நடிகர், எஸ்.எஸ். ரா சேந்திரன்
இதனைப் படமாக எடுத்து வருகிறார்.

## தலை கொடுத்தான் தம்பி

மாடர்ன் தியேட்டர்ஸ் எடுக்கும்இக் கதைக்கு
முரசொலி மாறன் வசனம் வளர்க்கிறார்.
மருத காசி; சுரதா; இருவரும்
இதற்குப் பாடல்கள் எழுது கின்றனர்.
நடிப்பிசைப் புலவர் இராம சாமியும்!
இலட்சிய நடிகர் இராசேந் திரனும்!
தலைகொ டுத்தான் தம்பியில்
தலைமை வேடம் தாங்குகின் றனரே!

*இதழ்: இலக்கியம் (15–7–1958)*

## தம்பி தங்கக் கம்பி

முதலில் தம்பி முடிவில் கம்பி;
இரண்டு சொல்லுக்கும் இடையில் – தங்கம்!
மூன்று சொல்லையும் முறையே நிறுத்தினால்
தம்பி தங்கக் கம்பி – ஆகும்!
இதுவோ இராஜம் படத்தயா ரிப்பினர்,
எடுத்து வெளியிட இருக்கும் முதற்படம்.

கதையும் வசனமும் நாக சண்முகம்;
டைரக்ட் செய்பவர் சீனி வாசன்;
இப்படத் தின்நிழல் நடிகர் யாரெனில் –
நாசர் அல்ல, பிரேம்நசீர்! எம்.ஏ.
இராஜம் அல்ல. எம்,என். ராஜம்!
அயோத்தி ஜானகி அல்ல, அல்ல
ஆந்திரப் பந்து சௌகார் ஜானகி!

### மாதவி

எம்.ஏ.வி. பிக்சர்ஸ் எடுக்கும் படமிது.
சேடப் பட்டி சிங்கக் குட்டி
இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆரும்;
சந்தனப் பதுமை சௌகார்ஜா னகியும்
இந்தப் படத்தில், தங்கள் திறமையைக்
கூட்டு நடிப்பினால் காட்டுகின் றனராம்!

**சத்தியவான்**

இலட்சிய நடிகர், கைபடாத ரோஜா
இருவரும் நடிக்கும் இந்தப் படத்தை;
எஸ்.எஸ். நாதன் இயக்கு கின்றார்.
இராஜம் பிக்சர்ஸ் இதைஎடுக் கின்றது.

**சம உரிமை**

நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்கள்
இடிஇ டித்திட நடிக்கும் படமிது!
வசனம், விருதை, ந. இராம சாமி
தஞ்சை ராமையா தாசும், மருத
காசியும் பாட்டு கட்டு கின்றனர்.
தனலட்சுமி பிக்சர்ஸ் தயாரிப் பு,இது!

**கனிமொழி**

வாலிபச் சென்னையில், வாணி பிக்சர்ஸ்
எடுக்கும் படத்திற்கு என்னபெயர் தெரியுமா?
கனிமொழி! தலைப்போ கற்கண்டுக் கட்டி!
நதிநீர்க் குளிரும், இளநீர் இனிப்பும்
வைத்து வசனம் தைத்துக் கொண்டு
வருகின் றாராம் மணிஎழுத் தாளர்!

## சுமங்கலி

புலிப்பல் தாலியோ; புதுப்பொன் தாலியோ,
கழுத்தில் தொங்கும் மங்கையின் கதையிது.
இத்தக் கதையைப் படமாக எடுப்பதோ,
இராஜேஸ் வரிபிலிம்ஸ் எனும்திரை வீடு!
மாங்குயில் ஓசை, பதியும் இப்படத்தில்;
வாங்க மச்சான் வாங்க சரோஜா,
பக்கிரிசாமி, பாலாஜி, வில்லன்
நடராசன் முதலியோர் நடித்துவரு கின்றனர்!

## அத்தானுக்கு ஆயுசு நூறு

தாயைப் போல பிள்ளை; நூலைப்
போல சேலை– என்னும் படத்தை,
எடுத்து வரும்ஸ்ரீ இலட்சுமி பிக்சர்ஸ்,
அடுத்த படியாக எடுக்க இருப்பது,
அத்தா னுக்கு ஆயுசு நூறு.

## அன்பு எங்கே?

அன்பு எங்கே? இவ்வாறு, தாங்கள்
எடுக்கும் படத்திற்கும் பெயரிட்டு உள்ளனர்,
ஜுபிலி பிலிம்சார்; ஜுபிலி படத்தில்,

பிரமீளா, சூரிய கலா, மை னாவதி,
நூல்இடை, வேல்விழி காட்டும்இந் நால்வரும்,
பிடிக்குள் அடக்கும் புடவை நடிகைகள்!

பண்டரி பாயும் உண்டென்று கேள்வி;
வேட்டி நடிகர் யார்யார் என்றால்,
மக்கள் மதிக்கும் மூன்று 'ரானா'க்கள்.
அந்த ரானாக்கள் யார்யார் என்றால்,
ராமச் சந்திரன்; ரங்கா ராவ்; எஸ்
எஸ். இரா ஜேந்திரன் இவர்களே ஆவர்!

## கனவு பலித்ததம்மா

பத்மினி பிக்சர்ஸ் படத்தயா ரிப்பின்
நிர்வாகி, டி.ஏ. அண்ணா மலையும்,
மற்றொரு முக்கி யஸ்தரும் சேர்ந்து,
புதிதாய் எடுக்கப் போகும் படமிது!
பத்மினி பிக்சர்ஸ் உதவி டைரக்டர்
இரா.சண் முகமெனும் இளமைக் கவிஞர்,
கதைஎழுது கின்றார் அதோடு, இளநீர்

நதிச்சுவை வசனமும் பதித்து வருகின்றார்.
எலும்மிச்சம் பழத்தின் நிறம்போல் இருக்கும்
இராஜ சுலோசனா, எம்.என். இராஜம்

நாட்டியத் திறமை காட்டி டும்,தனம்
சுசீலா, சுட்டும் சுடர்விழி விமலா.
இவர்கள் ஐவரும்– இவர்க ளோடு,

குலதெய்வம் இராஜ கோபால், சகஸ்ர
நாமம், கள்ளபார்ட் நடராஜன், பிரேம்நசீர்
டி.எஸ். பாலையா, கே.ஆர். கிருட்டிணன்
இவர்கள் அறுவரும் இப்புதுப் படத்தில்,
நடிக்கலாம் எனப்பேச்சு அடிபடு கின்றது

## அதிகாரி

தஞ்சைமா வட்டத்தின் நெஞ்சு போன்ற
மாய வரத்தின், உதட்டோரம் இருக்கும்,
கொற நாடு என்னும் கூறை நாட்டுத்
தரும ராஜன் வசனம் விரித்திட,
புலவர் தமிழ்நெஞ்சன் பாடல் பின்னிட,
சித்திரா மூவிஸ் 'திரைவீடு' எடுக்கும்
புதிய படமே அதிகாரி என்பது.

## மின்னல் வீரன்

ஆசிரியர் ஏ.எல்.நாராயணன் அவர்கள்,
பின்னிய கதைதான் மின்னல் வீரன்

தேன்வாக்கி யங்களைத் தேக்கித் தேக்கி,
வசனமும் எழுதி வருகிறார் நாரா
டி.என்.ஆர். புரடக்ஷன்ஸ் தயாரிப்பு.இது!

**புலவர் படம்**

**அம்பலத்து அதிசயம்**

அத்துச் சாரியைப் பெற்ற புத்தகம்
கலிங் கத்துப் பரணி ஆகும், அதுபோல
அத்துச் சாரியைப் பெற்றதோர் படத்தை
ஏ.கே. வேலன் எடுத்து வருகிறார்.
விரைவில் புகழ்பெற்ற வேலன் எடுக்கும்
படத்தின் பெயரோ, அம்பலத்து அதிசயம்

**தத்துவவாதியின் படம்**

**பார்வதியின் பிரார்த்தனை**

அமைதியை விரும்பும் நண்பர்; கல்விச்
சுமையைத் தாங்கிக் கொண்டு இருப்பவர்;
சேலம் ஆத்தூர், எஸ்.டி. சுந்தரம்,
சுந்தரமவர்கள் சொந்தமாய்ப், பார்வதியின்
பிரார்த்தனை என்னும் படத்தை எடுக்கிறார்

**கவிஞர் படம்**

**சிவகங்கைச் சீமை,**

காக்காய் பிடிக்கும் இந்தக் காலத்துத்
தாடிப் பாண்டியன்; பாடிப் பாண்டியன்;
பீடிப் பாண்டியன்; பேடிப் பாண்டியன்;
அல்ல அல்ல; சிவகங்கைச் சீமை
மருது பாண்டியன் என்பவன்; அவனோ
விருது பாண்டியன், வீராதி வீரன்;
அன்னவன்வாழ்க்கையை கண்ணதாசன்
பிக்சர்ஸ், திரைப்பட மாக
எடுத்துவருகிறதுதுடிக்கும்திறமையொடு

*இதழ்: இலக்கியம் (15–9–1958)*

# சிவாஜி கணேசனே சிறந்த நடிகர்

– நடிகை பத்மினி

சித்தூர் ராணாவின் முத்திரை மனைவி,
பத்மினி! அந்தப் பத்மினி, ராஜ
ராணி! ராணாவின் சொந்தக் கேணி!
அன்னவன் ஏறிச் சொல்லும் தோணி!

நடிகை பத்மினியோ, நாட்டிய ராணி!
தேனீ ரசிகர்க் கெலாம்அபி மானி!
செக்கச் சிவந்த கிழங்குத் தாமரை!
தென்னாட்டின் வெள்ளித் திரைஉல கப்பிறை!
வடித்த மருந்து! உதட்டின் விருந்து!

ராணி பத்மினி, ராஜ புத்திர
வம்சத்தில் வந்த வாலிபக் கண்ணகி!
பப்பி என்னும்இப் பருவ பத்மினி,
வெள்ளி மண்டலம் கிள்ளிப் பார்க்கும்,
கேரள நாட்டின் கிளியோ பாத்ரா!

சரஸ்வதி அம்மாளின்
சத்துப் புத்திரி;
நடிகை லலிதாவின்
நல்ல தங்கை;
ரத்த ரோஜா
ராகினியின் தமக்கை;

அழகி பத்மினி,
அமெரிக்க வானொலியில்,
பேட்டி அளித்த
போது; அவரிடம்,
கேட்கப் பட்டன,
கனிந்த கேள்விகள்.
கேட்ட கேள்விக்கு,
வீட்டுத் தாமரைப்
பூப்போன்ற பத்மினி

வாய்விடை வழங்கினார்.
ஓவிய மங்கை, உரைத்த பதிலை—
செய்யுள் தமிழிலே நெய்து வைத்துள்ளோம்.

உலகுபுகழ் பெற்ற உதய சங்கர்,
எடுத்த கல்பனா என்னும் படத்தில்
நடனம் ஆடினேன் முதன்முத லில்நான்.

நடனம் ஆடுவோர், இயற்கை யாக,
நடிக்க முடியும்; நன்கு உணர்ச்சியை
முகத்தில் வடித்துக் கொடுக்க முடியும்.

என்தாய் மொழியாம் மலையா ளத்திலும்,
தனித்து இயங்கி இனிக்கும் தமிழிலும்,
நடித்துக் கொண்டு வருவ தோடு,
இராஜாஜி எதிர்க்கும் இந்தி மொழியிலும்
நடித்தும், நடித்துக் கொண்டும் வருகிறேன்.

சிம்மக் குரலோன், சிவாஜி கணேசனே,
உணர்ந்து நடிப்பவர்! எனக்குப் பிடித்தவர்!
திருமணம் என்பது, தேனும் பாலும்
சேர்வது போன்றது; சேர்ப்பது போன்றது.

என்திரு மணத்தைப் பற்றி எனக்கு,
நினைத்துப் பார்க்கவே நேரம் இல்லை.

எப்படிப் பட்டக் கணவனைத் தேர்ந்து
எடுப்பது என்றுநான் எண்ணிப் பார்க்கவும்
அவகாசம் இன்றி இருந்து வருகிறேன்.
நடித்தோம், முடித்தோம், மெத்தையில் படுத்தோம்,
கண்ணை மூடினோம், காலையில் எழுந்தோம்,
புதுநீர் ஆடினோம், புடவையை மாற்றினோம்,
வானொலி கேட்டோம், வண்டியில் சுற்றினோம்—
ஆயிற்று நம்கடன் என்று இராமல்,

ஞாயிற்றுக் கிழமை களில்தவ றாது,
சமையல் வேலையை
நானே செய்கிறேன்.

காய்கறி நறுக்கும் போது, காந்தள்
கைவிரல் தன்னையும்
நறுக்கிக் கொள்கிறேன்;
பூம்புகார்க் கோவலன்
மனைவியைப் போல!

பூங்குயி லுக்குமாங்
கொழுந்தே அமுதம்!
தேங்காய் நாட்டில்
பிறந்த எனக்கோ
மாங்காய் ஊறுகாய்
என்றால் உயிர்தான்.

மேடை அரசியல் வாதிக்கு மட்டும்,
இலட்சியம் உண்டு என்றுஎண் ணாதீர்
எனக்கும் பலவித இலட்சியம் உண்டு!
வெள்ளித் திரைப்படம் தயாரிக்க வேண்டும்
என்ற ஆசை எனக்கிருக் கின்றது.
ஆயினும் அதற்கு அவகாசம் இல்லையே!

*இதழ்: இலக்கியம் (1-10-1958)*

## தஞ்சையில் திருமணம்
(10–9–58)

ஈ.வி. சரோஜாவின் ஒன்றுவிட்ட சகோதரர்
ராஜய்யா வுக்கும் விஜயலட் சுமிக்கும்,
திருமணம் நடத்தது, தஞ்சைமா நகரிலே,
வேதா ரண்யம் வேத மூர்த்தி,
குளிக்கரை, காரு குறிச்சி, ஏ.கே.சி.
நடராசன் முதலியோர் கருவிஇசை வடித்தனர்
அமைச்சர்கள், சட்டசபை அங்கத்தினர்கள்
திரைப்பட பிரமுகர், பலரிடமிருந்தும்,
வாழ்த்துச் செய்திகள் வந்துசந் தித்தன!

## ராணி சம்யுக்தை

பிருதிவி ராஜனின் விருந்துக் காதலி,
ராஜ ஓவியம் ராணிசம் யுக்தை.
அந்த வடக்கு அன்னத்தின் கதையை,
ஏ.சி. பிள்ளை எடுத்து வருகிறார்.
எம்.ஜி.ஆர். பத்மினி இரண்டு பேரும்.
இந்தப் படத்தில் சந்திக் கின்றனர்!

## டைரக்டர் ஸ்ரீராம்

உச்சிப் புகழ்பெற்ற பச்சை யப்பன்
கல்லூரி தன்னில் கல்வி பயின்றவர்;
நடிகர்; எழுத்தின் நயத்தை உணர்பவர்;
ஸ்ரீராம் அவர்கள், விரைவி லேஓர்,
படத்தை டைரக்ட் செய்யப்போ கிறாராம்!

## கலைமகள் பிக்சர்ஸ்

பதினைந்து ஒன்பது ஐம்பத் தெட்டிலே
தி.நகர், இராஜா பாதர் வீதியில்
இருக்கும் இரண்டாம் எண்ணுள்ள, மச்சுக்
கட்டட மாகிய 'கலைமகள் பிக்சர்ஸ்'
மணிஅழகு வகுத்துக் காட்டும் பணிமனைத்
திறப்பு விழாமிக சிறப்புற நடந்தது.

மஞ்சள் பூசாத மாவுமுக நடிகையர்;
செஞ்சொல் வசனம் திறம்படப் பேசும்,
முதல்நிலை நடிகர், மற்றும் பற்பலர்
மங்கல விழாவுக்கு வருகை தந்தனர்.

நாடறிந்த, திருச்சி லோக நாதன்
தமிழ்த்தாய் வணக்கப் பாடல் பாடினார்
மீனா மூவிஸ் அதிபர் உயர்திரு
சோம சுந்தரஞ் செட்டியார்; செயல்படும்
மனையைத் திறந்து வைத்து வாழ்த்தினார்.
கனவு பலித்த தம்மா என்னும்,
கதையும், அந்தக் கதைக்கு உரையாடலும்,
எழுதி வரும், இரா சண்முகம் அவர்கள்,
விழாவுக்கு வந்தோரை வரவேற்றுப் பேசினார்.

எடுக்கப் போகும்என் படத்தைப், பி.ஆர்.
பந்தலு டைரக்ட் செய்வார் என்றும்,
லிங்கப்பா நல்லிசை அமைப்பார் என்றும்,
கூறிக், கைகுவித்து நன்றி கூறினார்;
படத்தயா ரிப்பாளர் ஏ.டி.அண் ணாமலை.

*இதழ்: இலக்கியம் (1-10-1958)*

# வரஹினியாரின் அதிசயத் திருடன்

**அரசன்**

தரையைத் தடவி, நுரையொடு நழுவும்,
நதிகள் நிறைந்த நாட்டினை ஆளும்
மக்கள் தந்தை; மணிமுடி வேந்தன்
திக்கெங்கும் பெரும் புகழ் தைக்கும் காவலன்,
பார்வைக்கு அப்பாவி போன்று இருப்பினும்,
வாடாத அறிவும், ஓடாத புகழும்,
உடையவன்; நல்ல எண்ணம் முடைபவன்!

**அதிசயத்திருடன்**

அந்த நாட்டில்ஓர் அதிசயத் திருடன்;
அவனோ, கண்ணுக்கு அடங்காத அழகன்;
பொய்யை நாவினால் நெய்யாத இளைஞன்.
கண்ணால் பெண்ணை திருடும் கலைஞன்;

## ஓர் நாள்

நீர்நாட்டை ஆளும் அரசன் ஓர்நாள்;
மலர்ந்த கொன்றை மரத்தின் மீது,
இருள்நீல மயில்கள் உறங்கும் இரவினில்,
மாறு வேடத்தில் ஊர்சுற்றி வருகிறான்.

இச்சு இச்சு என்று எச்சில் முத்தம்
வச்சு வச்சு வளர்க்கும்நல் இரவில்
தெற்கு வடக்கு பேசாத திருடனை
வீரவாள் வேந்தன் சந்தித்து விடுகிறான்.
பொந்து மாதிரி, போக்கிரிப் பயலின்,
அந்தரங் கத்தை அறிந்து கொள்கிறான்.

## அமைச்சன்

அந்த அரசனின் தலைமை அமைச்சனோ,
மூன்று பக்கம் முட்கள் உடைய
நெருஞ்சி போன்றவன்; நீசன், கயவன்;
பக்தனைப் போல பாசாங்கு, காட்டும்
தந்திர மந்திர; அரசி யல்நரி!
கட்டுடல் மாதரைக் கட்டாயப் படுத்திப்
புணர்ச்சி நித்திரை புரியும் காமுகன்!

## பூக்காரி

ஈக்கள் மொய்க்காத பூக்களை விற்கும்
சேல்விழி மங்கை அந்தத் திருடனைக்
காத லிக்கிறாள், கன்னம் தருகிறாள்!
கொம்புத்தேன் தங்கிய குழிக்கிண்ணம்
ஆகிறாள்.

## நடிகர்கள்

நகைச்சுவை வழங்கும் நடிகர், தங்க
வேலு, வேந்தன் வேடத்தில் வருகிறார்.
பாலையா, காம லீலை புரியும்,
வஞ்சக மந்திரியாக வருகிறார்.
செக்கச் சிவந்த சிங்கார நடிகர்
ஜெமினி கணேசனே அதிசயத் திருடன்.
பூக்காரியாக நடிக்கும் நடிகை,
தீக்குச்சி மருந்துபோல் தேகம் கறுத்த
சாவித் திரிதான்! இனிக்கும் திராட்சைதான்!
நாகையா, சந்யாசி யாக நடிக்கிறார்.
புல்லையா டைரக்ட் செய்து வருகிறார்.
வாகினி யாரின் இந்தத் தமிழ்ப்படம்,
தீபா வளியன்று திரையி டப்படும்!

## தங்கப் பதுமை

தங்கப் பதுமை; தண்ணீர்த் தாமரை;
மங்காத நிலவு; மலையாள இளநீர்—
பத்மினி; தஞ்சையின் நீலச் சித்திரம்,
திருமதி டி.ஆர். இராஜகுமாரி;
தேன்கவி பாரதி— சிவாஜி கணேசன்,
இவர்களைக் கொண்டு, ஜூபிடர் எடுக்கும்,
தங்கப் பதுமை என்னும் 'தமிழ்நிழல்'
வெடிசுடும் தீபா வளியன்று வெளிவரும்!

## கட்டாய இந்தியில் கணேசன்

பத்மினி பிக்சர்ஸ் எடுக்க இருக்கும்
இந்திப் படத்தில், இயற்கை நடிகர்
சிம்மக் குரலோன், சிவாஜி கணேசன்
நடிக்கச் சம்மதம் கொடுத்துள் ளாராம்!

## குறவஞ்சி

குற்றா லக்குறவஞ்சி என்பதோ,
திரிகூட ராசப்பக் கவியின் கவிதைநூல்.
குறவஞ்சி என்பதோ, மூனா, கானா,
மேகலா வுக்கு எழுதும் திரைவரி,
நடிக்கிறார் இலட்சிய நடிகர்இப் படத்தில்,
இதைக்காசி லிங்கம் இயக்கி வருகிறார்.

## தாமரைக் குளம்

நடிகவேள் எம்.ஆர். இராதா நடிக்கும்
தாமரைக் குளம் எனும் தமிழ்த்திரைப் படத்தில்,
சகுந்தலா; சௌகார் ஜானகி; புதுக்கனி
பத்மினி பிரிய தரிசினி; இந்து
லேகா; 'காகா' கண்ணப்பா; அசோகன்;
முதலியோர் நடிக்க; முகவை இராச
மாணிக்கம் வசனம் எழுதி முடிக்க;
கல்யாணி பிக்சர்ஸ் இதைத்தயா ரிக்கக்;
கொடிபோல் விரைவில் வளர்ந்து கொண்டே
வருகிறது இப்படம், ஸ்டுடியோ தாயிடம்.

## கவிஞர் சுரதாவின் கண்ணீர் பாடல்!

ஒளியோ! இருளோ—புகை
ஓவியந்தானோ?
தேன் கூடாவேனோ? மண் ஓடாவேனோ?
—இவ்வாறு ஆரம்பமாகும் விழிமழைப்
பாடலை நியூஏஞ் ஜல்பிலிம் சுக்கு
கவிஞர் சுரதா எழுதி யுள்ளார்,
கதையின் தலைவி, கண்ணீர் விட்டுக்
கதறி, உள்ளம் சிதறிப் பாடிட!

*இதழ்: இலக்கியம் (15–10–1958)*

# வெளிவராத வெண்ணிலா!

நடிகை சாவித்திரிக்கு, நாகூர் சாவித்திரி எழுதிக் கொண்டது.

இந்தக் கடிதம் எழுதும், என்னை உனக்குத் தெரியாது. ஆனால் உன்னை எனக்கு ஐந்தாறு ஆண்டுகளாய்த் தெரியும்.

ஆத்திரத்திலே பிறந்து, அழகுமிக்க ஒரு தமிழ் நடிகருக்கு தாரமாகி, நடிப்பு நட்சத்திரமாக விளங்கும் உன்னை, இந்த நாடே நன்கு அறியும்.

நான் உன்னை நேரிலே பார்த்ததில்லை என்றாலும், திரைப்படங்களில், வாரத்திற்கு ஒரு முறையாவது பார்க்கிறேன்.

திரையில் தெரிவது, உன் நிழல்தான் என்றாலும், அந்த நிழலைப் பார்க்கும்போது, எனக்கு ஓர் ஆனந்தம் ஏற்படுகிறது. ஆகாயத்து நிலாவை அண்ணாந்து பார்க்காமல், நீரிலே தெரியும் அதன் நிழலைப் பார்க்கும் போது கூட, இன்பம் ஏற்படத் தானே செய்கிறது!

நீயும் ஒரு பெண். நானும் உன்னைப்போல் ஒரு பெண்தான். கிட்டத்தட்ட உன் வயதும் என் வயதும் ஒன்றாகவே இருக்கலாம். உன் பெயர், சாவித்திரி. என் பெயரும் அதுதான்! நீயும் கலப்பு மணம் செய்து கொண்டவள். நானும் கலப்பு மணத்திலே கனிந்தவள். ஆனால், என்னைவிட உன் சீர்திருத்தம் சிறந்தது.

உன் திருமணத்திலே, இரண்டு நிறங்களின் சந்திப்பு இருக்கின்றது. இரண்டு நாடுகள் கூடுகின்றன.

உன் வாழ்வில், நடிப்பும் துடிப்பும் உறவாடுகிறது. காரமும் புளிப்பும் கைகோத்துக் கொண்டிருக்கிறது.

உன்னை பன்னீர் நனைக்கிறது. என்னைத் தண்ணீர் நனைக்கிறது. என் முகத்தை, மஞ்சள் பார்க்கிறது. உன் முகத்தை, மாவு பார்க்கிறது. என் வாழ்க்கை, ஒரு மரத்தெப்பம். உன் வாழ்க்கை, ஒரு வெள்ளிப் படகு! உன் சேலையோ, சிலந்திநூல்! என் சேலையோ, ஏழைப் பருத்தியிலே இழுத்த ஓர் இழை!

உன் பெயரோ, விண்மீது ஒட்டிக் கொண்டிருக்கிறது! என் பெயரோ, மண்மீது, கட்டைபோல் கிடக்கிறது. நீ எங்கே? நான் எங்கே!

உன்னைப் போல் நானும் பிறந்தேன்

என்னைப் போல் நீயும் பிறந்தாய்!

பிறப்பிலே ஒன்றானாலும், சிறப்பிலே நீ தனி! நான் தனி!

புவியில் அழகு எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை. எல்லோரும் மேதைகள்ாக முடிவதில்லை.

சிலருக்குச் செல்வம் இருக்கும்.

செல்வாக்கு இருக்காது. ஒரு சிலருக்கு, செல்வாக்கு இருக்கும்; செல்வம் இருக்காது. நம் நாட்டைப் பொறுத்தவரையில், செல்வமும் செல்வாக்கும் ஒருவரிடம் சேர்வது என்பது அரிதாகவே இருக்கிறது. அந்த வகையில், உனக்கு எந்தக் குறையும் இல்லை.

உன் காலடியிலே பணமும், நீ மூச்சுவிடும் திசையிலே, புகழும் படுத்துக்கிடக்கின்றன.

பணத்தை, ஆயிரம் ஆயிரமாக எண்ணிப்பார்க்கும் உனக்குக் கூடிய விரைவிலே, குழந்தைச் செல்வமும் கிடைக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன்.

உன் கணவர் ஜெமினி கணேசன், உனக்குப் பெண் குழந்தை பிறக்க வேண்டும் என்று பிரியப்படுகிறாராம்! உனக்கோ, ஆண் குழந்தை மீது ஆசையாம்! ஒரு சில மஞ்சள் ஏடுகள், உங்கள் விருப்பத்திற்கு வேறு காரணங்களைக் கூறுகின்றன!

ஆண் பிறந்தால் என்ன? பெண் பிறந்தால் என்ன? பொன்னின் இருபக்கங்களுக்கும் ஒரே மாதிரி மதிப்புதானே!

ஒரு பெண், காதலியாக இருக்கும் நேரத்தைவிட; மனைவியாக மாறுகின்ற நேரம், மிகவும் கௌரவம் வாய்ந்தது, மனைவி, ஒரு குழந்தைக்குத் தாயாகும் போது, தந்தங்களை வெளியே நீட்டும் யானையின் மதிப்பை அவள் பெறுகிறாள்.

தாய் - ஒரு தெய்வம் என்று, பல புத்தகங்கள் சத்தமிடுகின்றன. ஒரு உண்மையான தெய்வம், குடும்பம் நடத்துவதில்லை. குழந்தை பெறுவதில்லை.

தாய்- ஒரு தெய்வம்- என்று வர்ணிப்பது, விவாதத்திற்குரிய ஒரு நம்பிக்கை.

ஒரு நிகழ்ச்சியை, நம்பிக்கையாக்கக் கூடாது, அதனைச் சரித்திரமாக்க வேண்டும்.

தோலினால் தேய்த்துப் பொன்னை பளபளப்பாக்க வேண்டுமே தவிர, பசையற்ற பாராங்கல்லின்மேல் அதனைத் தேய்க்கலாமா?

தாய்-தன் உதடுகளால் கணவனோடு பொழுது போக்குகிறாள். குழந்தையின் கதையை, முலைப்பாலைக் கொண்டு எழுதுகிறாள்.

அன்னையும் தந்தையும் முன்னறி தெய்வம்-என்கிறாள் ஔவைக்கவி. ஆனால், குழந்தைக்கு அன்னையும் தந்தையும் உண்மையில் ஆறாம் வேற்றுமை போன்றவர்கள்.

அது,

உடைய,

இவை இரண்டும் ஆறாம் வேற்றுமையின் உருபுகள்

அது- என்பது, தற்கிழமை.

உடைய-என்பது, பிரிதின் கிழமை.

தற்கிழமை, சையோக சம்பந்தம் உடையது. பிரிதின் கிழமை, சமவாய சம்பந்தம் உடையது.

சையோக சம்பந்தம்- கையும் விரலும் போன்றது.
சமவாய சம்பந்தம் - உடலும், உடுத்துகின்ற உடையும் போன்றது.

கையும் விரலும் பிரிவதில்லை. உடலும் உடையும்-பிரியும், பிறகு வந்து சேரும்.

ஆகவே, தந்தையைவிடத் தாய் சிறந்தவள். உலகத்தில் தெய்வம்தான் உயர்ந்தது என்றால்! அந்த தெய்வத்தைவிடத் தாய் உயர்ந்தவள்!

இன்னும் இரண்டு மாதங்களில், நீ தாயாகிவிடுவாய் என்று, என்னை சந்திக்கும் ஏடுகளின் எழுத்துக் கோடுகள் கூறுகின்றன. "இன்னும் இரண்டே மாதங்கள்! அதற்குப் பிறகு நான் ஓர் அன்னை!" என்று நீ எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால், நீ தாயாகி உன் குழந்தையைத் தாலாட்ட நான்கு மாதங்கள் ஆனாலும் ஆகலாம்.

பொதுவாக எந்தக் குழந்தையும், பத்து மாதங்களுக்குமேல், தாயின் வயிற்றில் தங்கியிருப்பதில்லை. என்றாலும், பிரஞ்சு வீரன்

நெப்போலியன் பிறப்பை, உன் குழந்தையும் பின்பற்றினால், நீ தாயாக நான்கு மாதங்கள் ஆகலாம் அல்லவா?

உன்னைப் போல், நான் கர்ப்பவதியாக இருந்தபோது, பக்கத்து வீட்டுப் பாக்கியம், ஒரு நாள் என் வீட்டுக்கு வந்தாள்.

அவளோடு பேசிக் கொண்டிருந்தேன்: பேச்சுக்கு இடையில், வருத்தம் உள்ள பாரம் எது? என்று என்னைப் பார்த்துக் கேட்டாள். நான் விடைகூறத் தெரியாமல் விழித்தேன். ஓர் குழந்தைக்குத் தாயான மறுநாள்தான், அந்தக் கேள்விக்கு உரிய விடையை நானே புரிந்து கொண்டேன்.

வருத்தமுள்ள பாரம் எது? என்ற கேள்விக்கு விடை என்ன தெரியுமா? 'கர்ப்பம்' என்பதுதான். கர்ப்பமா? அது எப்படி என்று கேட்கலாம்.

ஒரு பெண், தன் தலைமீது இருக்கும் மூட்டை முடிச்சுகளையோ, இடுப்பில் ஏந்தியிருக்கும் குடத்தையோ மற்றொருத்தியிடம் கொடுத்துச் சிறிது நேரமாவது சுமக்கும்படிச் செய்யலாம். ஆனால், கர்ப்பவதியின் சுமையை அவ்வாறு, கைமாற்ற முடியுமா?

பிரசவமாகும் வரையில் ஒரு பெண், அந்த 'சந்தித்தச் சுமையைத்' தானே அல்லவா தாங்கித் தீர வேண்டியிருக்கிறது! ஆகவேதான், வயிற்றிலே இருக்கும் கரு, இந்த வையகத்துப் பொருள்களிலேயே, ஒரு வருத்தமுள்ள பாரமாக இருக்கிறது.

கர்ப்பம், வேதனையை வளர்க்கும் சுமைதான். என்றாலும், உயிர்களின் வளர்ச்சியைக் கருதி ஒரு பெண், ஒப்புக் கொண்டாக வேண்டிய, தோல் துன்பம்!

கரு-காதலர்களின் அந்தரங்கத்தைக் கூறும் கதை! உயிருள்ள சதை!

இரண்டு பதங்களைச் சேர்க்கும்போது இடையிலே தோன்றும் ஓர் புதிய எழுத்தைப்போன்றது தான் - குழந்தை.

குழந்தை சதையினால் செய்யப்பட்ட ஒரு கண்ணாடி. கண்ணாடி, பிறர் முகத்தை காட்டும். ஆனால் குழந்தை என்ற கண்ணாடியோ, தன் முகத்தைப் பெற்றோரின் அங்கத்திலே பார்த்துக் கொள்ளும்.

அப்படிப்பட்ட ஆனந்த வடிவத்தை, இன்றே பெற்று மகிழவேண்டுமென்று, நீ எண்ணலாம்! ஆனால்.... அது முடியுமா?

ஆமை, தன் முட்டையைப், பற்றி, நினைத்தால் போதும்; உடனே அது குஞ்சாக மாறிவிடும்.

மீன் தன் முட்டையை ஒரு தடவைப் பார்த்தால் போதும்; உடனே அது, பிஞ்சுக் குஞ்சாகிவிடும்.

ஆனால் அவ்வாறு செய்திட, நீ ஆமையோ மீனோ அல்லவே! நீயோ ஆந்திர அச்சுப் பதுமை! தெலுங்குத் தேன்கூடு!

பிரசவம் என்னும் துன்பத்திற்குப் பிறகுதான், பிள்ளை என்ற இன்பத்தைப் பெற முடியும்!

வெள்ளித்திரை விளக்கே!

விரைவில், உன் வீட்டில், குவா, குவா, என்ற ஓசை கேட்கட்டும்! அந்தக் குருத்து ஓசை, காற்றோடு, வந்து என் காதுகளைத் தொடட்டும்.

இப்படிக்கு

**சாதாரண சாவித்திரி**

*இதழ்: இலக்கியம் (1–12–1958)*

# நான் நாடகத்தில் நடித்ததில்லை

(ஈரக்கடலின் ஓரப் பகுதியைத்
தொட்டபடி இருக்கும் சுந்தரச் சென்னை
மயிலை ரசிக ரஞ்சனி
சபையில் நடந்த 'மலைச் சாரல் மாதவி'
எனும்நா டகத்திற்குத் தலைமை தாங்கி
நட்சத்திர மங்கை நடிகை சாவித்ரி
பத்து மூன்றுஐம் பத்து ஒன்பதில்,
பழகும்வாய் திறந்து பேசிய பேச்சை
விருத்த வரிகளில்
உரித்து வைத்துள்ளோம்!)

அன்புள்ள சபையோரே! அங்கும் இங்கும்
அமர்ந்திருக்கும் தாய்மாரே! வணக்கம். நேற்று
என்னைப்போல் ஓர்நடிகை இங்கு வந்து,
எண்ணத்தை வெளியிட்டார், தலைமை தாங்கி.
இன்றைக்கு நான்வந்து உள்ளேன்; நானும்
ஏதேனும் பேசித்தான் தீர வேண்டும்!
தின்றுசுவை பார்க்காத கனியைப் பற்றித்
தீர்ப்பளிக்கும் கட்டத்தில் நிற்கின் றேன்நான்.

மூடிமறைக் காமல்நான் சொல்வ தானால்,
முதியோரே, சபையோரே, இளந்தாய் மாரே!
மேடைதரும் நாடகத்திற் கும்ள னக்கும்
வெகுதூரம்; அரிதாரம் பூசிக் கொண்டு;
நாடகத்தில் இதுவரைநான் நடித்த தில்லை,
நடிப்பதற்கும் தெரியாது, நாடகத்தில்!
நாடகத்தைக் குறித்தேதும் சொல்வ தற்கு
நானேறியான்; இது ஓட்டை இல்லா உண்மை.

அத்திக்காய் உலகத்தில், சென்னை போன்ற
அச்சாரம் கொடுக்கின்ற நகரந் தன்னில்,
எத்தனையோ திருநாட்கள் நடப்ப துண்டு.
என்றாலும், விழாக்களில்நான் கலப்ப தில்லை.
மெத்தை உண்டு; நான் உண்டு; வேலை உண்டு;
வெளியில்நான் அடிக்கடியும் செல்வ தில்லை,
எத்தனையோ பொறுப்புக்கள் என்னைச் சுற்றி
இருக்கையிலே எனக்கேது ஓய்வு நேரம்?

மலையோரம் சதிராடும் மயிலைப் போன்ற
மங்கையரே இல்லாத நாட கங்கள்,
இலைமட்டும் நிறைந்துள்ள மரத்தைப் போல
இருக்குமென நான் நினைத்தேன். நாட கத்தில்,
தலைவாரி பூச்சூடி; சிறுவெங் காயச்
சருகுநிகர் சேலைதனை உடுத்துக் கொண்டு
மலைச்சாரல் மாதவியாய் வேடம் தாங்கி
வந்தாரே அவர்நடிப்பை மெச்சு கின்றேன்!

*இதழ்: இலக்கியம் (15–3–1958)*

## அஞ்சலியும் ஆபத்தும்!

மார்ச் பதின்மூன்றில், மதிக்கும் செங்கதிர்
உதித்து; வெய்யில் உதவும் காலையில்;
நரசு படப்பிடிப்பு நிலையந் தன்னில்,
எழுந்து அடங்குந்தீ விபத்து ஏற்பட்டது!

ஆந்திர அழகி அஞ்சலி கொஞ்சம், ஏ
மாந்திருந்தால், 'அம் மைனா' நடிகையைச்;
சேர்ந்தாரைக் கொல்லும் அந்தச் செந்தீ,
வற்றிச் செத்த வாழைச் சருகினைத்
தின்னுதல் போன்று தின்றே இருக்குமாம்!

## சரோஜா தேவிக்குப் பிரியமாம்!

பருத்தி விளையும் கரிசல்மண் பரப்பாம்
கருநட நாட்டின் கறுப்பு நடிகை,
சரோஜா தேவிக்கு ஸ்ரீதர்
எழுதும் வசனந்தான் இனிக்குமாம்! பிடிக்குமாம்!!

## துளிமழை பருகிய சிப்பி

வடநாட்டு வெண்புறா, நடிகை நர்கீஸ்,
துளிமழை பருகிய சிப்பி போல,
கருவுற் றிருக்கிறாா், குருத்துக்
குழந்தை ஈன்று கொஞ்சுவார் விரைவிலே!

இதழ்: இலக்கியம் (1-4-1959)

## இணைந்த கைகள்

அடிமைப்பெண் என்னும் அரியதோர் படத்தை
எடுத்து வெளியிட்ட எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்.
இணைந்த கைகள் என்னும்மோர் படத்தை
எடுக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ளது!

மணந்தநாள் இரவுபோல் மகிழ்ச்சிதர இருக்கும்
இணைந்த கைகளில், எம்.ஜி.யா ரோடு
செல்விஜெய லலிதா சேர்ந்து நடிக்கிறார்.

வாலி இதற்குப் பாடல் வடிக்கிறார்;
மெல்லிசை மன்னர் மெட்டமைத்து வருகிறார்.

இருண்ட வானம் இடுகின்ற வில்போல்
வண்ணம் காட்டி வளரும் இப்படம்,
அண்ணன் காட்டிய அரசியல் காட்டி,
ஆக்கமும் சிறந்த ஊக்கமும் காட்டி,

இணையாத கைகளை எல்லாம்
இணைக்கும் என்றே எதிர்பார்க்கின் றோமே!

## சாப்பாட்டு ராமன்

அருண்பிரசாத் மூவிஸ் அவசர மாகத்
தயாரித்து வருகின்ற சாப்பாட்டு ராமனில்,
சிவாஜி நடிக்கிறார். சிவாஜி ஜோடியாய்
வீங்கிய கே.ஆர். விஜயா நடிக்கிறார்.
நம்பியார், நகைச்சுவை நாகேஷ் நடிக்கிறார்.

கதையும், நல்ல கருத்துரையாடலும்
பால முருகனாம்; பாடல்கள் யாரோ?

ஆதவன் போன்ற மாதவன் அவர்களால்
அடியடி யாக அடிக்கடி வளரும்
சாப்பாட்டு ராமன் தைப்பொங்கல் பொங்கிச்
சாப்பிடும் நாளன்று நம்மையும்
கூப்பிடு வானாம் கூட்டுசோ றுண்ணவே!

## வா ராஜா வா

மூத்த கருங்கடல் முத்தங் கொடுக்கும்
மாமல்ல புரமெனும் மகாபலி புரத்தைப்
பின்னணி யாகப் பெரும்பாலும் வைத்துச்
சிறப்புறத் தீட்டிய திரைப்படக் கதையே
வாஅ ராஜா வாகும். அந்த
வார ஜாவொரு வண்ணப் படமாம்!

பிஞ்சுச் சிறுவன் பிரபாகரன் என்பவன்
கண்கவர் படத்தின் கதாநா யகனாம்?

விசனம் தராத வசன மெழுதும்
இலக்கியச் செல்வராம் ஏ.பி.என். அவர்கள்
இந்தப் படத்தின் இயக்குநர் ஆவார்.

முற்றும் வளர்ந்து முடிவுற்ற நிலையில்
இருக்கும் இப்படம், வெளிவந்து
சிரிக்கும் தேதி தெரிய வில்லையே!

**நவக்கிரகம்**

தாயா? மகளா? தங்கையா? தாரமா?
காயா? பழமா? கடலா? திடலா?
நீயா? நானா? நிழலா? வெயிலா?
என்றுநாம் கேள்வி எழுப்புதல் போலப்

பூவா? தலையா? என்னுமோர் புதுப்படம்
எடுத்து வெளியிட்டு வெற்றி ஏந்திய
அருள்பிலிம் சாரின் அடுத்த படைப்பே
நாமெதிர் பார்க்கும் நவக்கிரக மாகும்.

நாகேஷ் ஸ்ரீகாந்த் நண்பர்முத்து ராமன்,
துடிப்பு நடிகர் சுந்தர ராஜன்,
ராகினி ஜெயந்தி ராஜ சுலோசனா
ஆகியோர் நடிக்கும் அந்தப்படத்தின்
பாடலை வாலியும், பாட்டுக்கு ராகம்
அமைக்கும் பொறுப்பை அன்பர் குமாரும்
ஏற்றுக்கொண் டுள்ளனர். இதற்கு மேலாகப்
பாராட்டுக் குரிய பாலச்சந்தர்
இயக்குநர் பதவியை ஏற்றுக்கொண் டுள்ளார்.

கோள்களின் பெயரைக் கொண்ட படத்தை
விரைவில் முடித்திட வேண்டி
இரவுபக லாய்ப்படம் எடுகின் றனரே!

## தரிசனம்

ஏ.வி.எம். ராஜனும் எழில்புஷ்ப லதாவும்
தலைவன் தலைவியாய் நடிக்கும் தமிழ்படம்
தரிசனம் ஆகும். திரைத்தரி சனத்தில்

ஓரெழுத்துச் சோவும் ஆறெழுத்துப் பக்கிரி
சாமியும் சோமுவும் சந்திரி காவும்
மாலியும் குமரியும் மற்றும் பலரும்
நல்ல வேடத்தில் நடித்துவரு கின்றனர்.

பாடலைத் தவிர படக்கதை வசனம்
இரண்டையும் சிறந்த எழுத்தாளராகிய
சிங்கார வேலன் சித்தரித் துள்ளார்.

வெற்றி இயக்குநர் வி.டி. அரசே
இந்தப் படத்தை இயக்கி வருகிறார்
செந்தூர் பிலிம்ஸின் தெரிசனம்
அந்தி முல்லைபோல் அரும்பிவளர் கின்றதே?

*இதழ்: சுரதா (1–10–1969)*

சத்தியா பிலிம்ஸின்

# கன்னிப் பெண்

(கவிதை விமர்சனம்)

ஆட்ட பாட்டங்கள், ஆத்திர மான
சண்டைகள், கட்டில் சந்தோஷக் காட்சிகள்,
மூத்து நரைத்த முன்னாள் முதல்வர்போல்
சிரிக்காத பேரையும் சிரிக்க வைத்திடும்
சிரிப்பு நிகழ்ச்சிகள், சிறந்த பாடல்கள்,
அனைத்தும் கூட்டணி போலே அமைந்துள
படமே, கன்னிப் பெண்ணெனும் படமாம்!

இன்று வெளியான இந்தப் படத்தில்,
மாறு வேடத்திலும் வேறு வேடத்திலும்
நமது ஜெய்சங்கர் நன்கு நடித்துள்ளார்.

நாணம் காட்டி நகைமுகம் காட்டும்
வாணிஸ்ரீ நடிப்பை வாயாரப் புகழலாம்!

'வாநீஸ்ரீ' என்று வாணி ஸ்ரீயைச்
செல்ல மாக ஜெய்சங்கர் அழைத்து
வேடிக்கை செய்யும் விநோத கட்டமும்
நைலான் புடவை நங்கையர் நடனமும்,
கண்ணுக் கினிய காட்சிக ளாகும்!

மூவகை யான முரட்டுச் சண்டைகள்
சண்டியர்க் கெல்லாம் சரியான விருந்து!

தவறுகள் நிறைந்த தமிழ்ப்படத்துறைக்கு
நேற்று வந்த நிலாமுக லட்சுமி,
நன்கு பண்பட்ட நடிகைபோல் நடித்துளார்.

வஞ்சக வேடம் தாங்கிய மனோகரின்
வில்லன் நடிப்பு வெற்றி நடிப்பு!
சுருளி ராஜனின் தோப்பனார் நகைச்சுவை
நன்றாக உள்ளது. நடிகர் சோவின்
வழக்க மான வார்த்தை வெடிகள்
இந்தப் படத்தில் ஏராளம் உள்ளன.

அவினாசி மணியும், ஆலங்குடி சோமுவும்,
வாலீஸ் வரனெனும் வாலியும், இதற்குப்
பாட்டெழுதியுள்ளார். பாடல்கள் அனைத்திலும்
நல்ல கருத்துகள் நடமாடு கின்றன.

ஆக மொத்தம் ஐந்து பாடலில்,
அடிஏண்டி பெண்ணே, அத்தைக்குஒத்தைக்கண்
இறைவன் எனக்கோர்—என்னும் பாடல்கள்
பட்டி தொட்டியில் பரவும் பாடல்கள்
என்று சொல்லலாம் சிறந்தவை என்பதால்!

மெல்லிசை மன்னர் விசுவ நாதனின்
நல்லிசை கேட்க நயமாக உள்ளது.
அரும்பு மீசை ஆர்.கே. சண்முகம்,
நகைச்சுவைப் பொடியை நன்கு தூவி
உரையாடல் எழுதி யுள்ளார் சிறப்பொடு.

ஒப்பனை அழகும், ஒளிப்பதிவு முறையும்,
வரவேற்கத்தக்க வகையிலே உள்ளன.

அண்ணாவின் பேச்சிலே ஆழ மிருக்கும்,
பாவேந்தர் பாடலில் பலபொருள் இருக்கும்,
எம்.ஜி.ஆர். உளத்தில் ஈகை இருக்கும்,
ஆர்.எம். வீரப்பன் தயாரிப்பென் றாலே
சரக்கும் சாரமும் தவறாமல் இருக்கும்!
இந்தப் படத்திலும் இவற்றைக் காணலாம்.

சரியாகச் சொன்னால் சத்யா பிலிம்சின்

கன்னிப்பெண் சிறந்த கதைப்பெண்......
தன்கற்பைக் காக்கும் தமிழ்நாட்டுப் பெண்ணே.

இதழ்: சுரதா (1–10–1959)

# உலகம் சுற்றும் வாலிபன்

நாடே போற்றிய நாடோடி மன்னனை
ஆடிப் பாடிய அடிமைப் பெண்ணை
எடுத்து வெளியிட்ட எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்
உலகம் சுற்றும் வாலிபன் என்னும்
புரட்சிக் கனல் தரும் புதுப்படம் ஒன்றை
எடுக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ளது.

உலகம் சுற்றும் வாலிப னாகி
இசைபட வாழும் எம்.ஜி.ஆர். நடிக்கிறார்
கண்ணுக் கினிய கதாநா யகியோ
இன்னும் யாரெனத் தெரியவே இல்லை!

படத்தின் நீளமோ பதினெட் டாயிரம்
அடிகளைக் கொண்டதாய் அமைந்தி ருக்குமாம்!

தாய்லாந்து நாட்டில்; தாமரை அரும்புபோல்
இருக்கும் இலங்கையில்; இன்முகம் காட்டி
வரவேற்கக் கூடிய மலேசிய நாட்டில்
பதினையா யிரமடி படமாக்கப் படுமாம்!
மூவாயிரம் அடிகள் முத்தமிழ் நாட்டின்
தாவரம் தன்னில் தவழ்ந்து வளருமாம்!

உருண்டு திரண்ட உலகமும் சுற்றும்!
சுற்றும் உலகினை மக்களும் சுற்றுவர்!
இப்படம் வெளிவரின் இளைஞர்கள்
எப்படிச் சுற்றுவர் என்பது தெரிந்ததே!

இதழ்: சுரதா (1-12-1969)

# நூற்றுக்கு நூறு

இருகோடு கிழித்தும் எதிர்நீச்சல் அடித்தும்
வெண்திரை உலகில் வெற்றி பெற்றுள
கலாகேந்தி ரத்தின் கனிந்த முயற்சியே
நூற்றுக்கு நூறெனும் நூதனச் சித்திரம்.

ஜெய்சங்கர், இன்பத் தேன்மொழி லட்சுமி,
விஜய லலிதா, வேடிக்கை நாகேஷ்
ஆகியோர் இந்த அற்புதப் படத்தில்
தகுந்த வேடம் தாங்கிநடிக் கின்றனர்.

பாட்டுக்கு நல்லிசை கூட்டும் பொறுப்பைக்
குமாரும், கலையைக் கோதைமோக னாவும்,
படத்தினொளிப்பதிவை பால கிருஷ்ணனும்
ஏற்றுக்கொண் டுள்ளனர். இந்தப் படத்தைப்
பண்பட்ட இயக்குநர் பால சந்தர்
வசனச்சோ றூட்டி வளர்த்து வருகிறார்.

அமைதியாய் அடக்கமாய் இப்படம்
ஜெமினி கூடத்தில் தினம்வளர் கின்றதே.

இதழ்: சுரதா (1–12–1969)

# பொய் சொல்லாதே

பொய்சொல் லாதே என்னும் புதுப்படம்
ஜோதி சித்ராவின் சொந்தச் சித்திரம்

ரவிச்சந் திரனும் ராஜ ஸ்ரீயும்
மணிமா லாவும் மான்விழி சச்சுவும்
நாகேசும் 'தேங்காயும்' நடிக்குமிப் படத்திற்குச்
சிரிப்பும் சிறப்பும் சேர்ந்தஉரை யாடலை
ஏ.எல்.நா ராயணன் எழுதி வருகிறார்.

காவியக் கவிஞர் கண்ண தாசன்
பாகுபோல் இனிக்கும் பாடல் புனைகிறார்.
திரைஇசைத் திலகம் தேனிசை அமைக்கிறார்.

இந்தப் படத்தை இயக்குநர் பாலு
தயக்கமோ மயக்கமோ இன்றி
இயக்கி வருகின்றார் வியக்கும் முறையிலே.

*இதழ்: சுரதா (1–12–1969)*

# காலம் வெல்லும்

இந்திராணி பிலிம்சார் எடுக்கும் திரைப்படக்
கதையின் பெயரே காலம் வெல்லும்

ஓங்குபுகழ் பெற்ற ஒளிப்பதி வாளர்
கர்ணன் தயாரித்துக் காட்ட இருக்கும்

இத்திரைப் படத்தில், சித்திரை நிலவாம்
விஜய குமாரியும் வி.கே. ஆரும்
இந்நாட்டு ஜேம்ஸ்பாண் டெனும்ஜெய்சங்கரும்
குடம்பெற்ற நீர்போல் இடம்பெற் றுள்ளனர்.

இயக்குநர் தேவ ராசன் இதனைக்
கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வருகிறார்.

காலம் வெல்லும்! கர்ணனும் வெல்லுவார்
என்றே நினைக்கிறோம். எதையும்
நன்றே செய்யின் நட்டம் வராதே!

*இதழ்: சுரதா (1–12–1969)*

# ஏழையின் காதல்

சௌமியா பிலிம்சின் தயாரிப் பாகிய
ஏழையின் காதல் என்னும் படத்தில்,
பாரதி, சந்திர பாபு,ரவிச் சந்திரன்
முதலிய நடிகரே முத்திரை நடிகர்கள்.

கவிமுத்துக் கூத்தனும் கவிஞர் சுரதாவும்
இதற்குப் பாடல்கள் எழுதுகின்றனர்.
இந்தப் படத்தின் இயக்குந ராகிய
நாஞ்சில் ராஜப்பா, நாளும் பொழுதுமாய்க்
உருவாக்கிச் சிறந்த கருத்தாக்கி, இதனை
உருவாக்கி வருகிறார் உயர்ந்த முறையிலே.

*இதழ்: சுரதா (1-12-1969)*

# பத்தாம் பசலி

ஆலங்குடி மூவிஸ் ஆராய்ந் தெடுக்கும்
பத்தாம் பசலி என்னும் படத்தில்
ஆத்திர நடிகர் அசோகன். காதல்
பாத்திர நடிப்பில் பண்பட்ட ஜெமினி,
நகைச்சுவை விருந்து வழங்கும் நாகேஷ்,
விஜய லலிதா, வேல்விழி வசந்தா
ஆகியோர் நடிக்க, அந்தப் படத்தைப்
பகலிர வாகப் பால சந்தர்
இலக்கண முறைப்படி இயக்கி வருகிறார்.

குமார பருவம் மாறிய குமாரரின்
மெட்டுக் கேற்றதாய் மெச்சத் தக்கதாய்
ஆலங் குடியார் அற்புத மாகப்
பத்தாம் பசலிக்குப் பாட்டெழுதி யுள்ளார்.

கொதிக்கும் கோடையில்கொட்டகைதோறும்
உதிக்கும் படங்களுள் இதுவும் ஒன்றே!

இதழ்: சுரதா (1–3–1970)

## வியட்நாம் வீடு

ஆம்ஸ்ட்ராங் பிறந்த அமெரிக்க நாட்டிலே,
அண்ணாந்து நோக்கி அடடா! என்றே
வியந்து பாராட்டும் வீடுபல உண்டாம்!

அறிஞரும் கலைஞரும் அக்கிர காரமும்
வியந்து பாராட்டிய நாடக வீடுதான்
வியட்நாம் வீடு! வியட்நாம் வீடெனும்
மேடை நாடகமே வெள்ளித் திரைக்கொரு
படமாக எடுக்கப் பட்டு வருகின்றது.

நடிகர் திலகம் நடிக்கும் இப்படம்
சித்திரைக் கோடையில் வெற்றி
முத்திரை பதிக்குமாம் முத்தமிழ் நாட்டிலே!

*இதழ்: சுரதா (1-3-1970)*

# வசனமே இல்லாத படம்

தென்னா டுடைய சிவனை வழிபட்டு
முத்தி யடைந்த மூலக் குயவராம்
திருநீல கண்ட நாயனார் தினந்தொறும்
பச்சைமண் எடுத்துப் பானைசெய் தாராம்

குளத்துமண், நீரின் ஈரம் கொண்டமண்;
களத்துமண், ரத்தக் கறைகள் படிந்தமண்
பகைவரின் குருதி படிந்த மண்ணே
சிறந்தமண்! அதுவே சிவந்தமண் ஆதலால்,
அந்தமண் எடுத்தவ ராகிய ஸ்ரீதர்
இப்போதோர்புதுப்படம்எடுக்க முனைந்துள்ளார்.

வெண்திரை உலகின் மேதாவி யாகிய
ஸ்ரீதர் எடுக்கத் திட்டமிட் டுள்ள
வண்ணப் படத்தில் வசனமே இராதாம்!

கண்ணொடு கண்ணினை
நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல என்று கூறும்
திருக்குறள் கருத்தைத் திரைப்பட உலகில்
புகுத்த முயல்கிறார் போலும் அடிக்கடி
நகத்தைக் கடிக்கும் நண்பரிவ் வாண்டிலே!

இதழ்: சுரதா (15–3–1970)

# நீரும் நெருப்பும்

விண்ணி லிருந்து காற்றும், வீசும்
காற்றி லிருந்து கனலெனும் நெருப்பும்
நெருப்பி லிருந்து நீரும், அந்த
நீரி லிருந்து நிலமும் ஆதியில்
பிறந்த தாகப் பெரியோர் கூறுவர்.

நெருப்பையும் அதன்பகை யாகிய நீரையும்
தலைப்பாகக் கொண்ட தமிழ்ப் படம் ஒன்றை
எடுத்துக் கொண் டிருக்கும் இந்தப் படத்தில்
மந்திர வாதியாய் மக்கள் திலகமும்,
பழைசமஸ் தானாதி பதியாய் அசோகனும்
நகை—பகை காட்டி நடித்து வருகின்றனர்.

வெந்நீர் வில்லனும் தண்ணீர்த் திலகமும்
இந்தப் படத்தில் இடம்பெற் றிருப்பதால்,

காயப் படுத்தும் கத்திச் சண்டையும்
அரசியல் விளக்கமும் அறிவியல் வாதமும்
இல்லாமல் இருக்குமா என்ன! உவமை
இல்லாமல் இருக்குமா சுரதாவின் எழுத்திலே

இதழ்: சுரதா (15—3—1970)

# அகத்தியர்

பலநாள் தம்மிடம் பக்குவப் பட்டுத்
தமிழக முதல்வராய்த்
தலைவராய் டாக்டராய்க்
கலைஞர் விளங்குதல் கண்டுநம் பெரியார்,
பொறாமைப் படாமல் பூரிப் படைகிறார்!

ஆனால் அந்த அகத்திய முனிவரோ,
தம்மிடம் பயின்ற தலைமா ணாக்கனின்
புகழைக் கண்டு பொறாமைப் பட்டார்.

முற்றிய பொறாமைக் குற்றங் கொண்டவர்
ஆயினும், அந்த அகத்திய முனிவர்,
தமிழுக்கு—இலக்கணம் தந்தவர் ஆதலின்,
அவரை நாம் போற்றுதல் அவசிய மாகும்.

அன்னவர் பெயரால் அரங்கம் அமைப்பதும்,
பொன்வைத்து—உறங்கும்
பொதியமா மலையை
இடமாகக் கொண்டு
வாழ்ந்தவர் வாழ்க்கையைப்
படமாக எடுத்துப் படைப்பதும் அவசியம்!

பெயர்பெற்ற விஜய லட்சுமி பிக்சர்ஸ்
அன்னவர் வாழ்க்கையை வண்ணப் படமாய்
எடுக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ளது.

தனிக்குரல் இனிமையால்
சங்கீத வெற்றியைக்
குறிக்கும் சீர்காழி கோவிந்த ராசன்
அருந்தமிழ் வளர்த்த அகத்திய ராகவும்;

மணிக்குரல் டி.ஆர். மகாலிங்கம் அவர்கள்
நல்லதோர் வீணை நாரத ராகவும்;

இயற்கை அழகனாம் ஏ.வி.எம். ராஜன்
திரிபுரம் எரித்த சிவபிரா னாகவும்;

முத்தமிழ்ச் சுவைஞர் முத்து ராமன்
ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியராகவும்;
இரும்புடல் மனோகர் இராவண னாகவும்;

மாசற்ற மங்கை மண்டோ தரியாய்
வீசும் தென்றல் விஜய குமாரியும்
நல்ல முறையில் நடித்துவரு கின்றனர்.

மற்றுமிப் படத்தில் நடிகை மனோரமா,
குருத்தோலை போன்ற குமாரி பத்மினி
ராமதாஸ், சுருளி ராஜன், சேகர்,
சித்திரம் பயின்ற சிவகுமார் ஆகியோர்
எதுகை மோனைபோல் இடம்பெற் றுள்ளனர்.

திரை இசை- உவமைக் கவிஞர் சுரதா

64

மூன்று ராஜர்கள் இரண்டு குமாரிகள்
ஒரேஒரு ராமன் ஒரேஒரு லிங்கம்
இடம்பெற் றிருக்கும் இந்தப் படத்தின்
இயக்குநர் கூட இன்னொரு ராஜனாம்!

நாடுபுகழ் அந்த நாலாவது ராஜனே
நண்பர் ஏ.பி. நாக ராஜன்.

தெரிந்த கதையைத் திரைக்கதை யாக்கி,
வரவேற்கத் தக்க வசன மெழுதி,
ஏ.பி.என். இதனை இயக்கி வருகிறார்,

இலக்கண முனிவரோ இப்போது ஜெமினியில்
வளர்ந்து வருகிறார், அவரது வளர்ச்சியை
அளந்து வருகிறார் ஏ.பி.என். ஆங்கே.

*இதழ்: சுரதா (15–3–1970)*

# இதய வீணை

ஆனந்த விகடனில் மணியன் அவர்கள்
எழுதிய கதையே இதய வீணை.

இதய வீணையை இப்போது படமாய்
உதயம் புரொடக்ஷன் உருவாக்கு கின்றது.

வண்ணத்தை விழிகள் வரவேற்கும் என்பதால்,
இதய வீணையை இதனுரிமை யாளர்கள்
வண்ணப் படமாய் வளர்த்துவரு கின்றனர்.

மக்கள் திலகமும் மஞ்சு ளாவும்
இணைந்து நடிக்கும் இப்படம் ஜெமினியில்
வளர்ந்துவரு கின்றது வளர்பிறை போலவே!

இதழ்: சுரதா (15-3-1970)

# குறத்தி மகன்

திரைப்பட உலகில் திலகங் களுக்குக்
கொஞ்சங் கூடப் பஞ்சமே இல்லை!

மதிப்புக் குரிய மக்கள் திலகம்
யாரெனில் எம்.ஜி.யாரென்று சொல்லுவார்,

நமது நாட்டில் நடிகர் திலகம்யார்?
என்று கேட்டால் சிவாஜிதான் என்பர்.

கரையிசைத் திலகம் காக்கை என்றால்.
திரையிசைத் திலகம் திருவாளர் கே.வி.
மகாதேவன் என்றால் மறுப்பார் உண்டா?

இந்த நாட்டின் இயக்குநர் திலகமாம்
கே.எஸ். கோபால கிருட்டிணன் அவர்கள்
எடுக்கும் படமே குறத்திமகன் என்பதாம்.

குன்றத்தில் வாழும் குறத்தியின் மகனோ
நாள்தொறும் நாள்தொறும்
நன்றாக வளர்கிறான்.

செக்கச் சிவந்த ஜெமினி கணேசனும்
வேல்விழி கே.ஆர். விஜயாவும் இதிலே
நடித்துவரு கின்றனர்,
அடுத்துவரும் காட்சிக்குப்
பாடல் ஒன்று பதிவாக்கப் பட்டதாம்.

விஜயா இருப்பதால், கே.எஸ்.ஜி. எடுப்பதால்,
ஜெமினி கணேசன் சிறப்பாய் நடிப்பதால்,
பாட்டும் வசனமும் பழம்போல் இனிப்பதால்,
மற்றொரு வெற்றி மலர்ந்திடும் என்றே
நம்பு கின்றோம், எதற்கும்
தெம்பு கொடுப்பது நம்பிக்கை தானே!

இதழ்: சுரதா (1-4-1970)

# குமரிக் கோட்டம்

மருந்தெனச் சிறந்த வடலூர் வள்ளலார்
கவிதையால் புகழ்ந்த கந்த கோட்டமோ
செல்வம் கொழிக்கும் சென்னையில் உள்ளது.

கொடை வள்ளல் நடித்துள
குமரிக் கோட்டமோ,
கோவை செழியனின் கூடத்தில் உள்ளது.

இந்தப் படத்தின் இலக்கண நடிகர்
எம்.ஜி.ஆர். ஆவார். இவரோடு நடிக்கும்
இலக்கிய நடிகையோ எழில்ஜெய லலிதா
கி.பி. அசோகனும் கிண்டல் சோவும்
மனோகரும் லட்சுமியும் மற்றும் இப்படத்தில்
அநேகரும் நடித்துள்ளர் அன்பர் சொர்ணம்
வசனம் வளர்த்துளார். மெல்லிசை மன்னரின்
இசை வெள்ளப் பாய்ச்சல் இதிலே உண்டு.
இயக்குநர் நீல கண்டன் இதனைத்
தயக்கமோ, இடையில் தளர்ச்சியோ இன்றி,
'வணக்கம்' எனும்வரை வளர்த்துள் ளாராம்.

நாவலர், பாவலர், நல்லோர் பலரின்
ஆசியைப் பெற்றுள கே.சி. பிலிம்சின்
பொங்கல் புதுப்படம், கொடை தரும்
சிங்கம் இருப்பதால் சிறந்து விளங்குமே!

*இதழ்: சுரதா (1–4–1970)*

# உத்தரவின்றி உள்ளே வா

பொல்லாத கருங்கடல் பொங்கிப் பெருகி
உத்தரவின்றி உள்ளே வந்ததால்,
முத்தமிழ்ச் சங்கம் மூழ்கி மறைந்தது!
ஏழ்தெங்க நாடும் எங்கோ மறைந்தது!

அந்நாளில் காவிரி ஆற்றுநீர் வெள்ளம்
உத்தரவின்றி உள்ளே வந்ததால்
ஓங்குபுகழ் பெற்ற உறையூர் அழிந்தது!

நல்லவர், மிகமிக நம்பிக்கைக் குரியவர்,
உத்தர வின்றி உள்ளே வரலாம்.
அந்தித் தென்றலும் அப்படி வரலாம்!
மற்றவர் வருவதும், வரநாம் விடுவதும்
குற்றத்திற்கு விருந்து கொடுப்பது போலாம்!

சிறந்த இயக்குநர் ஸ்ரீதர் அளிக்கும்
உத்தரவின்றி உள்ளேவா என்னும்
திரைப்படம், எந்தத் தேவியை நோக்கி
ஆசையோ டிப்படி அழைக்கின்ற தென்பதை
அறியோம்! ஆயினும் அழகில் சிறந்த
முத்தாரம் என்பதை முன்னரே அறிவோம்.

அறுவடைத் திருநாள் அன்று வெளிவரும்
வண்ணப் படத்தில்; எண்ணங்கள் ஏறிய
உரையாடல் உண்டாம்!
ஒவ்வொருவர் நாவிலும்
பட்டு வெளிப்படும் பாடல்கள் உண்டாம்!

கட்டித் தழுவும் காதலி யாக
காஞ்சனா நடிக்கிறார். காதல னாக
ரஞ்சித நடிகர் ரவிச்சந்தர் நடிக்கிறார்.

எதிலும் நாகேஷ்! இதிலும் நாகேஷ்
இருக்கிறார்; சுந்தரி பாயும் இருக்கிறார்

என்.சி. சக்கர வர்த்தி என்பவர்
இந்த படத்திற்கு இதயம் போன்றவர்.

சுடச்சுட எதிர்ப்பது சுதந்திரா கட்சி
ராஜ தந்திரி ராஜாஜி என்னும்
அச்சக்ர வர்த்தியே அதற்கு டைரக்டர்!
இச்சக்ர வர்த்தியே இதற்கு டைரக்டர்!

சித்ரா லயாவின் இந்தச் சித்திரம்
உத்திர வாதம் உடைய மருந்தே!

*இதழ்: சுரதா (1–5–1970)*

# நான்கு சுவர்கள்

எந்த இல்லமும் இரண்டு சுவர்களால்
முற்றுப் பெறுவது முடியாத காரியம்.

முறையோடெழுப்பியமூன்றுசுவர்இருப்பினும்
கூழைமோனைப்போல்குறைபாட்டைக்காட்டும்
ஆகவே நான்குசுவர் அவசியம் தேவை.

கற்களால் எழுப்பும் சுவரைக் காட்டிலும்
சொற்களால் எழுப்பும் சுவரே சிறந்தது.

இயக்குநர் பால சந்தர்—தாம் எழுதிய
கதையால் ஒருசுவர்; கருத்து நிரம்பிய
வசனத்தால் ஒருசுவர்; வல்லவர் இயற்றிய
பாடலால் ஒருசுவர்; பயன்தரக் தக்க
இசையினால் ஒருசுவர்—இப்படி யாக
நான்கு சுவர்களை நமக்குத்தர விருக்கிறார்.

சீரோடு, மிகச் சிறப்போடு புது—ஸ்கிரீன்
என்டெர்டெய்ன் மென்ட்ஸார் எடுக்குமிப்படத்தில்,
நடிகர்ஜெய் சங்கரும் நாகேஷ்—ரவி சந்திரனும்
வாணி ஸ்ரீயும், வசந்த குமாரியின்
திருவளர் செல்வி ஸ்ரீவித்தி யாவும்,
தக்க வேடம் தாங்கிநடிக் கின்றனர்.

டம்டம்...டம்டம்... டம்டம்... இப்படம்
புதியவண் ணப்படம்; பொங்கலில் வெளிப்படும்
என்பதை அறிக, கரும்பு
தின்னும் நாள் அன்று சென்று வருகவே!

இதழ்: சுரதா (1–5–1970)

# இரு துருவம்

இண்டிகேட் சிண்டிகேட் இரண்டும் நம்நாட்டில்
இருதுருவ மாக இருப்பதைப் பார்க்கிறோம்.
இருதுருவம் என்றதும் எழுத்தாளர் நெஞ்சில்
காண்டேகர் எழுதிய கதைவந்து நிற்கும்:

பொங்கல் நாளன்று வெளிவரப் போகும்
இருதுருவம் என்னும் இந்தப் படமோ,
எண்ணிய படியே எடுத்து முடித்துள்ள
வண்ணப் படமாம்! வசூல்தரும் படமாம்!

பிரபலமான பி.எஸ்.வி. பிக்சர்ஸ்
முயன்று தயாரித்து முடித்து வைத்துள
இந்தப் படத்தில், ஈடிணை யற்ற
சிவாஜியும், ஆடற் கடலையிலே சிறந்த

நடிகைபத் மினியும், நண்பர்முத்து
ராமனும், சுந்தர ராஜனும், பக்தி
பஜனை செய்யும் பண்டரி பாயும்,
நண்பர்வீ ரப்பனும் நடித்திருக் கின்றனர்.

இருதுருவம் என்னும் இந்தப் படத்தின்
இனிய உரையாடலை எம்.கே. ராமுவும்
மெல்லிசை அமைப்பை விசுவ நாதனும்,
ஒளிப்பதி வதனை உயர்வின் செண்ட்டும்,

இயக்குநர் பொறுப்பை இராம நாதனும்
ஏற்றுக்கொண் டுள்ளனர். இப்படம், மக்கள்
எதிர்பார்க்கும் படமாய் இருக்கும்! காதலர்
எதிர்பார்க்கும் முத்தம் கசப்ப தில்லையே–!

இதழ்: சுரதா (1–5–1970)

# அவுத்துவுடு

கேர்புல் டைரைக்டர் கே. பால சந்தரின்
உதவியால் முன்னுக்கு வந்த ஒருநடிகர்
நாடகம் ஒன்று நடத்த விரும்பி,
அதற்கேற்ற கதையை ஆராய லானார்.

ஏட்டிலும் நோட்டிலும் இருந்த கதைகளோ,
சாரமும் ஈரமும் சத்தும் சரக்கும்
இல்லா திருக்கவே எழுத்தாளர் ஒருவரின்
உதவியை நாடினார் உல்லாச நடிகர்.

"நல்ல கதையொன்று நான்வைத் திருக்கிறேன்
சொல்லவா?" என்று தோழர் கேட்கவே,
"நமது வீட்டுக்கு நாளை வருக!
அங்கே என்னிடம் அதனைச் சொல்லுக!"
என்று கூறி எழுந்துசென் றாராம்!

மறுநாள் காலை மலர்ந்தது, மலர்ந்தபின்
எழுந்து நீராடி ஏழைஎழுத் தாளர்
பையும் கையுமாய்ப் பறந்தார் அவரிடம்,

அவரைக் கண்டதும் அந்த நடிகர்,
'அப்பனே! எங்கே "அவுத்துவிடு" பார்க்கலாம்'
என்று சொன்னாராம் ஏளன மாக!

அந்த நடிகரின் அலட்சியப் போக்கும்,
ஏளனப் பேச்சும் இதயத்தில் தைக்கவே,
சென்றவர் ஏதும் பேசாமல் திரும்பினார்!

வரச்சொன்ன தாலே வந்த ஒருவரை
அலட்சியப் படுத்துதல் ஆணவம் அல்லவா?

ஆணவம் ஒருவனை அழிக்கும் ஆயுதம்
என்பதை உணரார் எவரோ அவரெலாம்,
சிறந்த வாழ்வினை இழந்தே
அறுந்த ஊஞ்சல்போல் ஆவர் முடிவிலே!

*இதழ்: சுரதா (1–5–1970)*

# சிந்தை கவர் 'நடிகர்' சின்னப்பா

அந்த நாளில் திரையுலகில் எழுத்தாளர்களை மதிக்கத் தெரிந்த கலைஞராகத் திகழ்ந்தவர் பி.யு.சின்னப்பா. ஒருவரின் எழுத்தை பிடித்துவிட்டால், அந்த எழுத்தை அவர் விமர்சிப்பதே தனித் தன்மையாக இருக்கும்.

"அது புதிதாக இருக்கிறது" என்று 'புதியது' என அழுத்தமாகக் கூறுவார், அவர். நன்றாக இருக்கிறது என்று பாராட்டுவது வேறு; புதியது என்று ஊக்குவிப்பது வேறல்லவா?

ஆனால் அதே சமயத்தில் கவிஞர்களோ-எழுத்தாளர்களோ அவரிடம் தாம் சுயமாகச் சிந்தித்து எழுதியது என்று பேலித்தனமாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் இலக்கியங்களில் அவருக்கு மிகுந்த பிடிப்பு உண்டு. ஆழமாகப் படித்து மனதில் பதிய வைத்துக் கொள்ளும் ஆற்றல் அவரிடம் இருந்ததால் போலிகளை - அவர் அதன் ஆணி வேரோடு போர்த்து-கூடவே நாலு வசவுகளையும் அடுக்கி முகத்தில் விட்டெறிவார்.

எனவே, அவரிடம் பலருக்கு அன்று பயமும் இருந்தது நியாயம்தான்.

குறிப்பாக அந்த நாளில் பிரபலம் அடைந்திருந்த சித்தர் பாடல்களில் அவருக்கு மிகவும் விருப்பம் இருந்தது. அதுபோக சங்கரதாஸ் சுவாமிகள் போன்ற நாடகாசிரியர்களின் பாடல்களும், குணங்குடி மஸ்தான் பாடல்களும் தலைகீழ்ப் பாடமாக இருந்தது. ஆகவேதான் தமிழில் தூய்மையாகப் பேசிப் பாடத் தெரிந்த நடிகராக அன்று அவர் புகழ் ஏணியில் உயர்ந்தார் என்றே சொல்லாம்.

படத்துறையில் அவர் காலத்தில் ஒரு வழக்கம் தொடர்ந்து வந்ததது. அது கடைசியில் அவரைப் பொறுத்தவரையில் ஒரு மரபாகவே ஆகிவிட்டது. அதனால் தான்- எந்த ஒரு படப்பிடிப்பு நடந்தாலும், அந்தத் தயாரிப்பாளர் நடிக்க வந்த நாளைக்கு பி.யு. சின்னப்பாவுக்கு இரண்டு பாட்டில் பிராந்தியும் இரண்டு கோழியும் தந்தாக வேண்டும் என்றாகி விட்டது.

காலையில் சிலம்ப விளையாட்டு விளையாடி உடலைக் கரைத்துக் கொண்டிருந்தபோது அந்த உடல் கரையாமல் உருண்டு திரண்டு கொண்டேயிருந்தது.

இதனால் நடிகையரில் சிலர் இவரை ஒரு முரடர் என்றும், குடிகாரர் என்றும் அந்த நாளில் கேலி செய்ததுண்டு. இப்படிப் பட்ட கேலிகளைக் கேட்டு மனதினால் அவர் நொந்து பொறுமியிருக்கிறார் ஆனால் அதற்காக அவர் நிம்மதிப் படுவதெல்லாம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பலர் முன்னிலையில் அப்படிச் சொன்னவர்களை வெட்கி நாணும்படி செய்து விட்ட பிறகுதான்! இப்படி வெட்கமடைந்தவர்களில் அவருடைய மொழிப்படி “வெள்ளைக்குதிரை” கண்ணாம்பா- “குட்டி முயல்” அஞ்சலிதேவி, “கீச்சு அணில்” பானுமதி போன்றவர் களும் உண்டு.

அவர் எப்போதும் வெளியிடங்களுக்கோ அல்லது கோயில் களுக்கோ செல்லும்போது சுமார் இரண்டரை லட்சம் பெறுமான முள்ள நகைகளை அணிந்து செல்லுவார். இந்தப் பெருமையில் அவருக்கே ஒரு உள்ளார்ந்த திருப்தி இருக்கும். மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக நாடகம், திரைப்பட நடிகர்கள் அந்த நாளில் செய்து கொண்ட ‘மேனியா’ என்பார்களே அந்தப் படாடோபம் அவருக்கும் இருந்தது.

கடுக்கனில் 14 வைரக் கல் இருக்கும். பச்சை மாலை போடுவார். 42 காரட் வைர மோதிரம் அணிவார். அந்த நாளில் காரட் வைரம் ஆயிரம் ரூபாய் விலையிருக்குமென்று நினைவு.

ஆனால் அதனை படாடோபமும் காட்ட நினைத்த அவர், இரவில் படுக்கும்போது இடுப்பில் ஒரு சின்னத் துண்டு கட்டிக் கொண்டு வெறும் தரையில் ஒரு காலையும் கையையும் உயர்த்திக் கொண்டபடி குப்புறப் படுத்துத் தூங்குவதில்தான் அவருக்குச் சுகமாம்.

"இதற்கு மேல் ஒரு இன்பம் எனக்கு கட்டிலிலும் இல்லை; மெத்தையிலும் இல்லை!"

இதுதான் அதற்கு அவர் அன்று சொன்ன பதிலாக இருந்தது.

அந்தச் சுகமிக்க உறக்கத்தை எவரும் கலைத்துவிடக் கூடாது என்பதிலும் மிகக் கண்டிப்பாக இருந்தார் பி.யு. சின்னப்பா.

கறுப்பாக இருந்தாலும் அழகாக இருந்தார், அவர். ஆரம்பகாலங்களில் தனக்கு உதவி செய்தவர்களுக்கு எல்லாம் வளர்ந்து விட்ட நேரத்தில் உதவிப் பெருமை படுத்திய சின்னப்பா, நிதி உதவிகள் செய்வதிலும் தாராள மனம் கொண்டிருந்தார்.

இவரால் உதவி பெற்றவர்களில் பி.எஸ். கோவிந்தன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அதிகமாக ஆங்கிலப் படங்கள் பார்க்கும் பழக்கமுள்ள இவருக்கு மட்டும் தான் அந்த நாளில் எலியட் பீச்சுக்குள் நுழையும் அனுமதி இருந்தது. ஏனென்றால், அன்று எலியட் பீச் வெள்ளைக்காரர்களுக்கு மட்டுமே ஒதுக்கி விடப்பட்டிருந்த கடற்கரை.

தன்னை யாரும் நேராகப் பாராட்டுவதை விரும்பாதவர் அவர். அரிய விஷயங்களைத் தங்கு தடையில்லாமல் அறிவார்த்தமாகப் பேசும் ஆற்றலும், மற்றவர்களுக்காகச் சிபாரிசு செய்வதோடு நில்லாமல், அந்தச் சிபாரிசுடன் உடனடிப் பலனை உண்டாக்கிவைக்கும் துணிவும் கொண்ட இவர் சீட்டாட்டத்தில் புலி.

யாருடன் ஆடினாலும் முதல் மூன்று ஆட்டம் வரையில் தோற்று விட்டுப் பிறகுதான் கையை உயர்த்துவார். உயர்த்த ஆரம்பித்து விட்டால் கடைசியில் கூட ஆடுவோர் பையை எல்லாம் அள்ளிக் கட்டிக் கொண்டுதான் விடுவார்.


ஒரு சிறந்த எழுத்தாளருக்குரிய, அறிவாற்றலும், பாடகருக்குரிய ஞானமும் நிரம்பியிருந்த அவர் நடிகரானதோடு மட்டுமில்லை; தமிழார்வம் மிக்கவராகவும் இருந்தார்.

திறமை எங்கிருந்தாலும் மதிக்கத் தெரிந்த அவரோடு, மிகவும் பிடிப்பாக இருந்தவன் என்கிறமுறையில் எனக்கு எம்.ஜி.ஆர். அவர்களை 1945 வாக்கில் அறிமுகப்படுத்தி வைத்து நல்ல எதிர் காலம் இவருக்கு ஏற்படும் என்று அவர் கூறிய சொற்கள் வீண் போய்விடவில்லை.

அவரை நினைக்கும் போதெல்லாம் அவருடைய எல்லாத் திறமைகளையும் விட கவித்திறன் தான் நெஞ்சில் மணக்கிறது வெண்பா எழுதுவதில் அவருக்கு விருப்பமும் வேகமும் இருந்தது.

ஒரு தடவை இரு முதலடிகளை எழுதிவிட்டு தனிச் சீருடன் இரு ஈற்றடிகளை எழுதி முடிக்கும்படி என்னிடம் தந்தார் அவர். அதை எழுதிக் கொடுத்துவிட்டு அவரிடம் பாராட்டுப் பெற்ற அந்த நினைவுக்கு இப்போது அந்த வெண்பாவைக் கையில் வைத்துக் கொள்ளவில்லையே என்கிற மனக்குறை அடிக்கடி என் நெஞ்சில் எழும்.

அது எழும்போதெல்லாம் என் நெஞ்செல்லாம் நிறைந்து நிற்பார் பி.யு.சின்னப்பா.



பிறைநிலவின் மொழி பெயர்ப்பே யானைத் தந்தம்;
பெற்றோரின் மொழிபெயர்ப்பே குழந்தை யாகும்;
வறுமையதன் மொழிபெயர்ப்பே ஏழை மக்கள்;
வானத்தின் மொழிபெயர்ப்பே பெண்ணின் பார்வை.



என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி புகழின் போர்வை!

அம்மா கணினியகம்